மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எண்ணியதை எண்ணியாங்கு முடிக்கக்கூடிய ஆற்றல்மிக்க முதலமைச்சராக விளங்கிக் கொண்டிருக்கிற புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் வருகிற ஆண்டிலே நிறைவேற்றித் தரப்படும் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 184, திரு. சி. ஞானசேகரன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

184—

ஸ்ரீபெரும்புதூருக்கு தனிப்பேருந்துகள்.

*5923—திரு. சி. ஞானசேகரன் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அமரர் ராஜீவ் காந்தி உயிர் நீத்த இடமான ஸ்ரீபெரும்புதூருக்கு சென்னையிலிருந்தும், வேலூரிலிருந்தும் மற்ற மாவட்டத் தலைநகர்களிலிருந்தும், தனிப்பேருந்துகள் விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை,

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை,

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. முன்னாள் பாரதப் பிரதமரும், பாரத ரத்னாவாக இருந்த எங்கள் இதய தெய்வம் ராஜீவ் காந்தி அவர்கள் இறந்த ஸ்ரீபெரும்புதூருக்கு பலதரப்பட்ட இலட்சக் கணக்கான மக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக அன்றாடம் சென்ற வண்ணம் இருக்கிறார்கள். ஆனால், அந்த இடத்தில் பஸ் நிற்காத காரணத்தினால் அவர்கள் அல்லலுக்கு ஆட்படுகிறார்கள். அதை கருத்தில் கொண்டு சென்னையில் இருந்தும் மாவட்ட தலைநகரங்களிலிருந்தும் செல்கின்ற பஸ்கள் நிற்பதற்கு மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள், எதையும் நினைத்ததை சாதிக்கக்கூடிய வல்லமை படைத்தவர், இதையும் செய்து முடிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

1992 மார்ச் 12]

முற்பகல் 9-50

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடத்திற்கு சென்னையிலிருந்து வேலூருக்கு ஸ்ரீபெரும்புதூர் வழியாக 107 நடைகளும், சென்னையிலிருந்து காஞ்சிபுரம் வழியாகச் செல்கிற பேருந்துகள் ஸ்ரீபெரும்புதூருக்கு 120 நடைகளும். திருவண்ணாமலையிலிருந்து 21 நடைகளும் அங்கே பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக ஐந்து நிமிடங்களுக்கு ஒரு பேருந்து அந்த வழியாக நின்று செல்கிற காரணத்தால் மேலும் பேருந்துகளை இயக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. பேருந்துகள் அடிக்கடி அந்த வழியாகச் செல்வது உண்மைதான், ஆனால் ஒரு பேருந்துகூட அந்த இடத்தில் நிறுத்து என்றால் நிறுத்தாமல் செல்கிற காரணத்தால் எல்லா பேருந்துகளும் அந்த இடத்தில் நின்று செல்லவேண்டுமென்ற உத்தரவை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் ஒப்பற்றத் தலைவியாக இருக்கிற தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் நாளை மறுதினத்திலிருந்து அந்தப் பகுதியில் எல்லா பேருந்துகளும் நிறுத்தப்படும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேஜையைத்தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண், 185. திருமதி ரெ. சியாமளா. மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்,

185—

கைத்தறி நெசவுத் தொழிலை ஊக்குவிக்க சிறப்புத் திட்டம்.

1136—திருமதி ரெ. சியாமளா :

*மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கைத்தறி நெசவுத் தொழிலை ஊக்குவிக்க அரசு சிறப்புத் திட்டம் வகுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS